**Starting time 11.22 A.M.**

# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

**O.S. No.259/2012**

Deposition of **<u>P.W. -2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Sathya, Gr. III Bench Clerk of this court, on 02.03.2021 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபாவதி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 165-ன் கீழ் இந்நீதிமன்றத்திற்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் தாவா சொத்தான தளவாய்பட்டி கிராம சர்வே எண் 42/1B சம்மந்தமாக புல வரைபடத்துடன் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சில விளக்கம் அளிக்கவேண்டி பெத்தநாயக்கன்பாளையம் வட்ட சார் ஆய்வாளருக்கு அழைப்பாணை அனுப்பியதன் பேரில், சாட்சி நேரில் ஆஜராகிய போது நீதிமன்றம் முன் வைத்த கேள்விகள்.

1) தளவாய்பட்டி கிராம சர்வே எண் 42/1 பி-ன் விஸ்தீரணம் என்னவென்றால், அ பதிவேட்டின் படி ஹேக்டேர் 1.20.0.

2) புல வரைபடத்தின் படி சர்வே எண் 42/1 பி-ன் நான்கு பக்க அளவுகள் என்னவென்றால் மேற்கில் 147.0 மீட்டர், கிழக்கில் 148.2 மீட்டர், வடக்கில் 58.0 மீட்டர், தெற்கில் 110.0 மீட்டர் ஆகும்.

3) புல வரைபடத்தில் சர்வே எண் 142/1 பி-ன் தென்புற அளவில் 110.0 என்று உள்ளதற்கு பக்கத்திலேயே அடைப்புக் குறிக்குள் 143.2 என்று உள்ளதற்கு அர்த்தம் என்னவென்றால், 42/1 ஏ-ன் தென்புற அளவான 33.2 மீட்டரை, 42/1 பி-ன்

தென்புற அளவான 110.0 உடன் கூட்டினால் வரும் அளவு 143.2 மீட்டராகும். அதைதான் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் முன்வைத்த கேள்வி:</u>** சர்வே எண் 42/1 பி-ன் கிழப்புற அளவு 148.2 மீட்டர் என்று உள்ளது, சரியான அளவாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், 148.2 என்று உள்ளதற்கு கிழக்கில் உள்ள 74.8 மீட்டர் + 68.4 மீட்டர் என்பதை கூட்டினால் 143.2 மீட்டர் என்று வரவேண்டும். ஆனால் புல வரைபடத்தில் தவறுதலாக 148.2 மீட்டர் என்று சொல்லப்பட்டுள்ளது. 42/1 பி நிலத்தின் உண்மையான கிழப்புற அளவு 143.2 மீட்டராகும். அவ்வாறு அளவு தவறாக உள்ளது எங்கள் அலுவலகத்திற்கு தெரிய வந்தல் அதை நானே புல வரைபடத்தில் திருத்தம் செய்யலாமா என்றால், முறையாக மனு கொடுத்தால், சம்மந்தப்பட்ட நபர்களுக்கு முன் அறிவிப்புக் கொடுத்து அதன் பின்னர் தான் அளவு திருத்தம் செய்யப்படும். UDR காலத்தின் போது தயாரித்த புல வரைபடத்தில் தான் 42/1 பி-ன் கிழபுற அளவு 148.2 மீட்டர் என்று தவறாக உள்ளது, ஆனால் தற்போது உள்ள கணிணி புல வரைபடத்தில் சரியான அளவான 143.2 மீட்டர் என்று உள்ளது. கணிணி புல வரைபடத்தை தாக்கல் செய்கிறேன். அது **<u>நீ.ம.சா.ஆ.1</u>** ஆகும். புல வரைபடத்தில் 42/1 பி-ன் அளவுகளை சதுர வடிவிலும், முக்கோண அளவிலும் கணக்கிட்டால்தான் துல்லியமான அளவு சொல்ல முடியும் என்றால், சரிதான், ஆனால் நாங்கள் செய்த கணக்கின்படி அ பதிவேட்டில் 1.20.0 ஹேக்டேர் விஸ்தீரணத்திற்கு பூமியில் குறைவாக இல்லை. அனுபவத்தின்படிதான் UDR ன் போது பட்டா வழங்கப்பட்டது என்றால் அனுபவத்தின்படியும் வழங்கப்பட்டது, ஆவணத்தின்படியும் வழங்கப்பட்டது.

வாதி தரப்பில் எந்த கேள்வியும் கேட்க வேண்டியது இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Ending time : 11.58 A.M.

**ஒப்பம்/- ஜி. யுவராஜ்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**